# ஆக்கினைத்தீர்ப்பில்லை



**மனன வசனம்**

**ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. ரோமர் 8:1.**

**ஆராய்ச்சிக்கு**

**ரோமர் 8:1-17**

நவம்பர் 25 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ரோமர் 7இன் கேள்விகளுக்கு பவுலின் பதில்தான் ரோமர் 8ஆம் அதிகாரமாகும். நிர்பந்தம், தோல்வி, ஆக்கினைபற்றி ரோமர் 7இல் பவுல் பேசுகிறார். அந்த ஆக்கினை ஒழிந்தது, அதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவின்மூலமாக விடுதலையும் வெற்றியும் கிடைத்தது என்று ரோமர் 8இல் சொல்கிறார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவருடைய அனுபவமானது ரோமர் 7இல் சொல்லப்படுகிற நிர்ப்பந்தமான அனுபவமாகத்தான் இருக்குமென ரோமர் 7இல் பவுல் சொல்கிறார். அப்படிப்பட்டவர் பாவத்திற்கு அடிமைப்பட்டிருப்பார்; தான் செய்ய நினைப்பதை அவ ரால் செய்யமுடியாது. ரோமர் 8இல், இயேசு கிறிஸ்து பாவத்திலிருந்து விடுதலை தருகிறாரென்றும், நீங்கள் செய்யவிரும்பியும் உங்கள் மாம்சம் தடைசெய்கிற நன்மையைச் செய்வதற்கான விடுதலையைத் தருகிறாரென்றும் கூறுகிறார்.

இந்த விடுதலை ஒப்பற்ற விலைகொடுத்து கிரயத்திற்கு வாங்கப்பட்டது. தேவ குமாரனாகிய கிறிஸ்து ஒரு மனிதனாக வந்தார். அவர் நம்மைப்போல ஒருவராவதற்கும், குறைவற்ற முன்னுதாரணமாக விளங்குவதற்கும், நம் பதிலாளியாக நமக்காக மரிப்பதற்கும் அதுதான் ஒரே வழியாக இருந்தது. ‘பாவமாம்சத்தின் சாயலாக’அவர்வந்தார். ரோமர்8:3. நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மில் நிறைவேறும்படிக்கு அப்படிச் செய்தார். ரோமர் 8:4. அதாவது, கிறிஸ்துவானவர் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளையும் நிறைவேற்றினார்; அதேவேளையில் பாவத்தின்மேல் வெற்றியையும் சாத்தியமாக்கினார். விசுவாசிக்கிறவர்கள் அந்த வெற்றியைப் பெறுகிறார்கள்; இரட்சிப்பிற்கான வழியாக அல்ல, இரட்சிக்கப்பட்டதின்விளைவாக அந்த வெற்றியைப் பெறுகிறார்கள். பவுல் சொன்ன செய்தியும், லூதர் சொன்ன செய்தியும் இதுதான்; நம்முடைய செய்தியும் இதுவாகவே இருக்கவேண்டும்.

2017, டிசம்பர் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள்

*'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.' ரோமர் 8:1.*

**'ஆக்கினைத்தீர்ப்பில்லை' என்றால் என்ன அர்த்தம்? எந்த ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறோம்? இது ஏன் நற்செய்தி?**

'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள்' என்கிற வார்த்தைகள் பவுலின் எழுத்துகளில் அதிகமாகக் காணப்படுபவை. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்தான் 'கிறிஸ்துவுக்குட்பட்டவராக' இருக்கமுடியும். அவர் கிறிஸ்துவை முற்றிலுமாக நம்புவார்; கிறிஸ்துவின் வாழ்க்கையை முன்னுதாரணமாக்கி வாழுவார். அதனால் கிறிஸ்துவோடு தனிப்பட்ட விதத்தில் நெருங்கிய உறவை வைத்திருப்பார்.

'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு' நேர்மாறானவர்கள், 'மாம்சத்துக்குட்பட்டவர்கள்.' இவர்களின் அனுபவத்தை ரோமர் 7இல் பவுல் சொல்லியிருக்கிறார். அதாவது, கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணிப்பதற்குமுன், தங்கள் பாவங்கள் உணர்த்தப்படுகிற நிலையில் இப்படிப்பட்டவர்கள் மாம்சத்திற்குரியவர்களாக, பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறார்கள். இவர்கள் மரண ஆக்கினைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ரோமர் 7:11,13,24. இவர்கள் 'பாவப்பிரமாணத்திற்கு' ஊழியஞ்செய்கிறார்கள். ரோமர் 7:23,25. இவர்கள் கொடும் நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறார்கள். ரோமர் 7:24.

ஆனால் ஒருவர் தன்னை இயேசுவிடம் அர்ப்பணிக்கும்போது, தேவனோடுள்ள அவருடைய உறவில் ஓர் உடனடி மாற்றம் உண்டாகிறது. முன்பு நியாயப்பிரமாணத்தை மீறினவராக, ஆக்கினைக்குள்ளாகப்பட்டு இருந்தவர், இப்போது தேவனுடைய பார்வையில் பூரணராகிறார்; பாவமே செய்யாதவராக எண்ணப்படுகிறார்; ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் நீதி முற்றிலுமாக அவரை மூடுகிறது. அவருக்கு ஆக்கினையில்லை; அவர் குற்றமற்றவர், பாவமற்றவர் அல்லது நித்திய ஜீவனுக்கு பாத்திரமானவர் என்பது அதற்கு காரணம் கிடையாது. (உண்மையில் பாத்திரமானவர் இல்லை!) மாறாக, இயேசுவின் பரிபூரண கீழ்ப்படிதல் இவர் கணக்கில் எண்ணப்படுவதால் இவருக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

**பாவ அடிமைத்தனத்திலிருந்து ஒருவரை விடுவிப்பது எது? ரோமர் 8:2.**

'ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்' என்றால், மனிதர்களை இரட்சிப்பதற்கான கிறிஸ்துவின் திட்டமாகும். இதற்கு எதிரானது 'பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம்'; பாவம் ஆளுகைசெய்கிற பிரமாணம் என்று இதை ரோமர் 7 கூறுகிறது. இதன் முடிவு மரணமாகும். கிறிஸ்துவின் பிரமாணம் ஜீவனையும், விடுதலையையும் கொண்டுவருகிறது.

'தேவனிடம் தன்னை ஒப்படைக்க மறுக்கும் ஒவ்வோர் ஆத்துமாவும் வேறொரு வல்லமைக்குக் கீழ்ப்படுகிறார். அவர் தானாகச் செயல்படமுடியாது. அவர் விடுதலைபற்றிப் பேசலாம்; ஆனால், மிகமோசமான அடிமைத்தனத்தில் இருக்கிறார். தான் தன் மனது சொல்கிறபடி நடப்பதாக பெருமையடித்தாலும், அந்தகார அதிபதியின் சித்தத்திற்கே கீழ்ப்படிகிறார். ஆத்துமாவின் பாவ அடிமைத்தனக் கட்டுகளைத் தகர்க்க கிறிஸ்து வந்தார்.' – *EGW, DA, p 466.*

'பிரமாணமானது' (சடங்காச்சாரப் பிரமாணம், ஒழுக்கப்பிரமாணம் இரண்டும்) எவ்வளவுதான் நன்மையானதாக இருந்தாலும், நமக்கு மிகவும் தேவையான ஒன்றை அதால் செய்யமுடியாது; அதாவது, இரட்சிப்பிற்கான வழிவகைகளை உண்டாக்கமுடியாது; பாவத்தால் உண்டாகும் ஆக்கினையிலிருந்தும் மரணத்திலிருந்தும் நம்மை இரட்சிக்கமுடியாது; இயேசுவால்மட்டுமே கூடும்.

***நியாயப்பிரமாணம் இயல்பாகவே செய்யமுடியாத எதை கிறிஸ்து செய்தார்? ரோமர் 8:3,4.***

தேவன் 'தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாக' அனுப்பி நம் பாவப்பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் கண்டார்; 'மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.' கிறிஸ்து மனிதனாகப் பிறந்தது, இரட்சிப்பின் திட்டத்தில் ஒரு முக்கியக் கட்டமாகும். சிலுவையை உயர்த்திக்கூறுவதில் தவறில்லை; ஆனால், இரட்சிப்பின் திட்டத்தின்படி கிறிஸ்து 'பாவ மாம்சத்தின் சாயலாக' வந்து, வாழ்ந்தது மிகவும் முக்கியமானதாகும்.

கிறிஸ்துவை நமக்காக தேவன் அனுப்பி வைத்ததால்மட்டுமே நியாயப்பிரமாணத்தின் நீதியான கோரிக்கைகளை நிறைவேற்றுவது சாத்தியமாகியது; அதாவது, நியாயப்பிரமாணம் கோரும் நீதியான செயல்களைச் செய்வது சாத்தியமாகியிருக்கிறது. 'நியாயப்பிரமாணத்தின்கீழ்' இது சாத்தியமில்லாதிருந்தது. (ரோமர் 6:14). 'கிறிஸ்துவுக்குள்' இப்போது சாத்தியமாகியிருக்கிறது.

ஆனாலும் நியாயப்பிரமாணத்தின்படி செய்யமுடிகிறதென்றால், இரட்சிப்பைச் சம்பாதிக்கும் அளவுக்கு கைக்கொள்ளமுடிகிறது என்று அர்த்தமல்ல. அதற்கு வாய்ப்பே இல்லை. மாறாக, தேவன் நமக்குத் தரும் பெலனளவுக்கு வாழமுடிகிறது; 'மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்து' (கலா 5:24) கிறிஸ்துவின் குணத்தைப் பிரதிபலிக்கும்படி கீழ்ப்படிதலுள்ள ஒரு வாழ்க்கையை வாழமுடிகிறது. ரோமர் 8:4இல் உள்ள 'நடத்தல்' எனும் வார்த்தை ஒரு மரபுச் சொற்றொடர்; ஒருவருடைய நடத்தையைச் சுட்டிக்காட்ட அது பயன்படுகிறது. மாம்சத்தின்படி நடத்தல் என்றால், சுயநல ஆசைகள் நிறைந்தவர்களாக நடந்துகொள்வதாகும்.

மாறாக, ஆவியின்படி நடப்பது நியாயப்பிரமாணத்தின் நீதியான கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகும். பரிசுத்த ஆவியானவரின் உதவியால்மட்டுமே இது சாத்தியமாகிறது. பாவம் உணர்த்தப்பட்ட பிறகோ முன்னரோ, ஒருவர் புதுப்பிறப்பின் அனுபவமில்லாமல் இருப்பதையே மாம்சம் என்கிற வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவில்மட்டுமே விடுதலை உண்டு. கிறிஸ்து இல்லாமல், அந்த விடுதலை கிடைக்கவே கிடைக்காது. பாவத்திற்கு அடிமையாக இருப்பவர் தான் செய்ய விரும்புகிற நன்மையைச் செய்யமுடியாத நிலையில் இருப்பார்.

நியாயப்பிரமாணத்தை சரியாகக் கைக்கொள்கிறீர்களா? நியாயப்பிரமாணத்தால் இரட்சிப்பைச் சம்பாதிக்கமுடியாது என்பதை நம்பி, 'நியாயப்பிரமாணத்தின் நீதியை' நிறைவேற்றுகிறீர்களா? இல்லை என்றால், ஏன்? உங்கள் நடத்தையை நியாயப்படுத்த எப்படிப்பட்ட நொண்டிச் சாக்குகளைக் கூறுகிறீர்கள்?

செவ்வாய்
நவம்பர் 28

## மாம்ச சிந்தையா அல்லது ஆவியின் சிந்தையா

*'மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.'* ரோமர் *8:5,6.*

***இவ்வசனங்கள் சொல்லும் செய்தி என்ன? நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறீர்கள் என்பதைச் சிந்தித்துப்பார்க்க இவை உதவுகின்றனவா?***

---

மாம்சத்தின்படி என்றால், மாம்சம் சொல்கிறபடி என்று அர்த்தம். 'சிந்தை' என்றால், நாட்டம் வைத்தல் என்று அர்த்தம். ஒரு கூட்டத்தார் தங்கள் சுபாவ ஆசைகளை நிறைவேற்றுவதில் நாட்டம் வைக்கிறார்கள்; மற்றொரு கூட்டத்தார் தேவனுடைய கட்டளைகளின்படி நடப்பதற்கு, ஆவிக்குரியவைகளில் நாட்டம் வைக்கிறார்கள். ஆசைகள் செயல்களைத் தீர்மானிப்பதால், இரு சாராரின் வாழ்க்கையும் செயல்பாடுகளும் நேர் எதிராக இருக்கின்றன.

***மாம்ச சிந்தையுள்ளவர்கள் எதைச் செய்யமுடியாது? ரோமர் 8:7,8.***

---

மாம்ச ஆசைகளை நிறைவேற்றுவதில் நாட்டம் சென்றுவிட்டால், அது தேவனுக்கு எதிரான பகையைக் கொண்டுவரும். அதையே சிந்தையாகக் கொண்டவர் தேவ சித்தத்தைச் செய்வதில் அக்கறைகாட்ட மாட்டார். தேவனுடைய கற்பனைகளை வெளிப்படையாக மீறி, அவருக்கு எதிராகக் கலகம்செய்வார்.

கிறிஸ்துவை விட்டுத் தள்ளியிருந்தால், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள முடியாது. ஒருவர் எவ்வளவுதான் மும்முரமாக முயன்றாலும், கிறிஸ்து இல்லாமல் அவரால் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவே முடியாது.

யூதர்களுக்கு 'ட்டோரா'வைக் (பிரமாணம்) காட்டிலும் அதிகமானது தேவையாக இருந்தது என்பதை பவுல் முக்கியமாகச் சுட்டிக்காட்ட விரும்பினார். தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றிருந்தபோதிலும், புறஜாதியார் செய்துவந்த அதே குற்றங்களை யூதர்களும் செய்துவந்தார்கள். (ரோமர் 2). அவர்களுடைய நடத்தையில் அது தெரிந்தது. எனவே, அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவரின்றி அவர்கள் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கவேண்டும்; அதன் ஆளுகைக்குத் தப்பமுடியாது.

பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுத்திருப்பது தாங்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஏன் போதாது என்று புரியாமலிருந்த யூதர்களுக்கு இந்த உண்மையை பவுல் கூறுகிறார். அவர்கள் செய்து வந்ததெல்லாம் நன்மைதான் என்றும், ஆனால் வந்திருந்த மேசியாவையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பவுல் கூறினார்.

கடந்த 24 மணி நேரத்தில், உங்கள் செய்கைகள் மாம்சத்துக்குரியவைகளாக இருந்தனவா, ஆவிக்குரியவையாக இருந்தனவா? மாம்சத்துக்குரியவைகளாக இருந்தனவென்றால், என்ன மாற்றங்களைச் செய்யவேண்டும்? எப்படிச் செய்யலாம்?

இரண்டுவிதமான வாழ்க்கையில் ஏதாவது ஒன்றை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்; அதுபற்றியே பவுல் தொடர்ந்து பேசுகிறார். ஒன்று, **ஆவியின்படி வாழ்தல்**; அதாவது, தேவன் வாக்குரைத்துள்ள தேவனுடைய பரிசுத்த ஆவியானவர்மூலம் வாழ்தல். மற்றொன்று, **பாவ சுபாவங்களோடும் மாம்ச சுபாவங்களோடும் வாழ்தல்.** முந்தின வாழ்க்கை நித்திய வாழ்க்கையையும், பிந்தினது மரணத்தையும் கொடுக்கும். இதில் நடுநிலைக்கே வழியில்லை. ‘‘என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்’’ என்று இயேசு தாமே சொன்னார். மத்தேயு 12:30. இதைவிட தெளிவாகச் சொல்ல வழி இல்லை.

**கிறிஸ்துவுக்கு தங்களை முற்றிலும் அர்ப்பணிப்பவர்களுக்கு எது வாக்களிக்கப்பட்டுள்ளது? ரோமர் 8:9-14.**

‘மாம்சத்துக்கு உட்பட்ட’ வாழ்க்கை வேறு; ‘ஆவிக்கு உட்பட்ட’ வாழ்க்கை வேறு. ‘ஆவிக்கு உட்பட்ட’ வாழ்க்கையை தேவ ஆவியானவர் கட்டுப்படுத்துவார். ரோமர் 8இல் கிறிஸ்துவின் ஆவி என்று அவர் அழைக்கப்படுகிறார்; அவர் கிறிஸ்துவின் பிரதிநிதி என்பதாலும், அவர்மூலமாகவே கிறிஸ்தும் தம் பிள்ளைகளில் வாசம்செய்வதாலும் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கலாம். ரோமர் 8:9,10.

ரோமர் 6:1-11இல் தான் பயன்படுத்திய அதே உருவகத்தை இந்த வசனங்களிலும் பவுல் பயன்படுத்துகிறார். ஞானஸ்நானத்தின்போது ‘பாவசரீரமானது’ அதாவது பாவத்திற்கு ஊழியஞ்செய்த சரீரமானது அழிக்கப்படுகிறது. ‘பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்படுகிறான்.’ ரோமர் 6:6. அடக்கத்தோடு முடிவதில்லை; ஞானஸ்நானத்தின்போது ஜலத்திலிருந்து எழுந்திருப்பதுபோல, ஞானஸ்நானம்பெற்றவர் புதிய ஜீவனுள்ளவராக நடந்துகொள்ள எழும்புகிறார். பழைய சுயநல வாழ்க்கைக்கு மரிப்பதற்கு இது அடையாளமாக இருக்கிறது; இந்தத் தீர்மானத்தை நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் செய்யவேண்டும். மனிதர்களின் சுதந்தரத்தை தேவன் அழிப்பதில்லை. பழைய பாவ மனுஷன் மரித்தபிறகும்கூட பாவம்செய்ய வாய்ப்பிருக்கிறது. ‘இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.’ கொலோ 3:5.

மனமாறிய பிறகும்கூட பாவத்திற்கு எதிரான போராட்டம் இருக்கும். வித்தியாசம் என்னவென்றால், ஆவியானவர் யாருக்குள் வாசம்பண்ணுகிறாரோ, அவர் வெற்றிபெறுவதற்கான தெய்வீக வல்லமையைப் பெற்றிருப்பார். மேலும், பாவம் என்னும் அடிமைத்தன எஜமானிடமிருந்து அற்புதவிதமாக அவர் தப்புவிக்கப்பட்டிருப்பதால், மீண்டும் பாவத்திற்கு ஊழியஞ்செய்யக் கூடாதென்கிற பொறுப்புணர்வு அவருக்கு இருக்கும்.

இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின அதே தேவ ஆவியானவர்தாம், நாம் அனுமதித்தால் நமக்குள்ளும் வாசம்செய்கிறார். அப்படியானால், நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் வல்லமை எவ்வளவு பெரியது! அந்த வல்லமையை நாம் பெறாதபடி நம்மைத் தடுத்துக் கொண்டிருப்பது எது?

## புத்திரசுவிகாரத்தின் ஆவி

***கிறிஸ்துவுக்குள்ளான புதிய உறவை பவுல் எவ்வாறு விவரிக்கிறார்? ரோமர் 8:15. இந்த வாக்குத்தத்தத்தில் நமக்கு என்ன நம்பிக்கை கொடுக்கப்பட்டுள்ளது? இதை எவ்வாறு நம் வாழ்வில் நிஜமாக்கலாம்?***

இந்தப் புதிய உறவில், பயத்திலிருந்து நமக்கு விடுதலைகிடைக்கிறதாம். அடிமைகள் அடிமைத்தனத்தில் இருக்கிறார்கள். தங்கள் எஜமானுக்கு எப்போதும் பயந்தே அவர்கள் வாழவேண்டும். எத்தனை வருடங்கள் ஊழியஞ்செய்தாலும் அவர்களுக்கு எந்த ஆதாயமும் கிடைக்காது.

ஆனால், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அப்படியல்ல. **முதலாவது,** அவர்கள் தாங்களாகவே விரும்பி அவருக்கு ஊழியஞ்செய்கிறார்கள். **இரண்டாவது,** பயமில்லாமல் ஊழியஞ்செய்கிறார்கள்; ஏனென்றால், 'பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.' 1யோவான் 4:18. **மூன்றாவது,** பிள்ளைகளாக அவர்கள் தத்தெடுக்கப்படுவதால், விலைமதிக்க முடியாத சுதந்தரத்தைச் சுதந்தரிக்கும் சுதந்தரவாளிகளாகிறார்கள்.

'அடிமைத்தன ஆவியானது, நம் சொந்தப் பெலத்தால் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்று, அதன்மூலம் கிரியைத்துவத்தை நம்பி வாழ்வதால் உருவாவதாகும். ஆபிரகாமின் உடன்படிக்கையின்கீழ் மட்டுமே நமக்கு நம்பிக்கை உண்டு; இது இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தின் மூலமான கிருபையின் உடன்படிக்கையாகும்.' – *EGW, 6SDABC, p 1077.*

***தேவன் நம்மை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருப்பதை நமக்கு உறுதிப்படுத்துவது யார்? ரோமர் 8:16.***

நாம் பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை தேவ ஆவியானவர் நமக்குச் சாட்சி பகருகிறார். வெறுமனே இந்த உணர்வு ஏற்பட்டால்மட்டும் போதாது; தாங்கள் பெற்றிருக்கும் அளவுக்கு வார்த்தையின் வெளிச்சத்தில் நடப்பவர்கள், தங்கள் உள்ளத்தில் பேசுகிற மெய்யான ஒரு சத்தத்தைக் கேட்பார்கள்; அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அந்தச் சத்தம் அவர்களுக்கு உறுதியளிக்கும்.

நாம் சுதந்தரவாளிகள் என்று ரோமர் 8:17 கூறுகிறது. நாம் தேவ குடும்பத்தின் அங்கத்தினர்கள்; நாம் சுதந்தரவாளிகள், பிள்ளைகள்; நம் தகப்பனிடமிருந்து உன்னதமான சுதந்தரத்தைப் பெறுகிறோம். அது நாம் சம்பாதித்து பெறுவதல்ல; தேவனிடம் நமக்குக் கிடைக்கும் புதிய அந்தஸ்தால் அது கொடுக்கப்படுகிறது. அந்த அந்தஸ்து நாம் சம்பாதித்துப் பெறுவதல்ல; அவருடைய கிருபையின்மூலம் கொடுக்கப்படுவது; நமக்காக இயேசு மரித்ததின்நிமித்தம் அது நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஆண்டவரோடு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறீர்கள்? அவரை உண்மையாகவே அறிந்திருக்கிறீர்களா அல்லது வெறுமனே கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உங்கள் சிருஷ்டிகரோடு, மீட்பரோடு நெருங்கி வாழ்வதற்கு நீங்கள் என்னென்ன மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது? அவ்வாறு வாழமுடியாதபடி உங்களைத் தடுப்பது எது? ஏன்?

## மேலும் படிக்க:

“இவ்வுலகில் விசுவாசிகள் உபத்திரவமும் சோதனையும் இல்லாத வாழ்க்கையை வாழலாம் என்று இரட்சிப்பின் திட்டம் உறுதியளிக்கவில்லை. மாறாக, அவர்கள் கிறிஸ்துவைப்போல சுயமறுப்பும் நிந்தையுமான வாழ்க்கையை வாழும்படி அது அழைக்கிறது. அத்தகைய சோதனையிலும் உபத்திரவத்திலும்தான் கிறிஸ்துவின் குணம் அவருடைய மக்களில் உருவாகி, வெளிப்படுகிறது. கிறிஸ்துவோடு அவருடைய உபத்திரவங்களில் பங்குபெறும்போது நாம் அறிவிலும் ஒழுக்கத்திலும் வளர்ந்து, இனிவரும் மகிமைகளில் பங்குபெற ஆயத்தமாகிறோம்.” – *6SDABC, p 568,569.*

“தேவ சிங்காசனத்திலிருந்து இறக்கப்பட்டுள்ள சங்கிலியானது ஆழங்கள் மட்டும் எட்டுவதற்குப் போதுமானது. சீர்கேட்டின் குழியிலிருந்து படுபாவியையும் தூக்கி, தேவனுடைய புத்திரராகவும், அழியாச் சுதந்தரத்தைப் பெறும் கிறிஸ்துவின் சுதந்தரவாளிகளாகவும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்களை வைப்பதற்கு கிறிஸ்து போதுமானவர்.” – *EGW, 7T, p 229.*

“பரலோகம் முழுவதிலும் கனம்பெற்றிருந்தவர், மனித இயல்பைத் தரித்து மனித இனத்தின் தலைவராக நிற்கவும், மனிதருக்கு அருளப்பட்டுள்ள தெய்வீக அனுக்கிரகத்தால் ஒவ்வொருவரும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கமுடியுமென விழுந்துபோன தூதர்களுக்குச் சாட்சிபகரவும் இந்த உலகத்திற்கு வந்தார்.

“நம் இரட்சகர் நமக்கான கிரயத்தைச் செலுத்தினார். யாரும் சாத்தானுக்கு அடிமைப்பட அவசியமில்லை. சர்வவல்லமையோடு நமக்கு உதவிசெய்பவராக, கிறிஸ்து நமக்குமுன் நிற்கிறார்.” – *EGW, 1SM, p 309.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *மேலுள்ள எலன் ஒய்ட்டின் மேற்கோள்களில் நாம் எப்படிப்பட்ட நம்பிக்கையைக் காணமுடிகிறது? முக்கியமாக, இந்த வெற்றியின் வாக்குறுதிகளை நாம் எவ்வாறு நம் வாழ்க்கையில் சொந்தமாக்கலாம்? கிறிஸ்துவில் இவ்வளவு அதிகமாக நாம் பெற்றிருந்தும், நாம் ஏன் குறைவுள்ளவர்களாகவே இருக்கிறோம்?*

2. *என்னென்ன வழிகளில், அனுதினமும் நாம் ‘ஆவிக்குரியவைகளைச் சிந்திக்க’ முடியும்? ரோமர் 8:5. ஆவியானவர் என்ன விரும்புகிறார்? நீங்கள் பார்க்கிற, வாசிக்கிற அல்லது யோசிக்கிற விஷயங்கள் எவ்வாறு அவர் விரும்புவதைச் செய்யவிடாமல் தடுக்கின்றன?*

3. *மாபெரும் போராட்டத்தில் ஏதாவது ஒரு பக்கத்தில் இருந்தாகவேண்டும்; நடுநிலைக்கே வாய்ப்பில்லை. என்னென்ன உண்மைகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளன? இந்த முக்கிய உண்மையை உணர்வது, ‘சிறு’ விஷயங்களில் கூட நாம் எவ்வாறு வாழ்கிறோம், என்ன தீர்மானிக்கிறோம் என்பதில் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*